Date: 25.09.2025
OS.No.129/2024 (34/2023)
PW-1 – முருவன், த/பெ. கண்ணு உடையார்.

**குறுக்குவிசாரணை**

நான் தாவா கிராமத்தில் எத்தனை வருடங்களாக வசித்துவருகிறேன் என்றால் பூர்வீகமாகவே அங்கு தான் வசித்துவருகிறேன். பிரதிவாதிகள் இருவரும் அதே ஊரில் தான் வசித்துவருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி இருவருமே எனது உறவினர்களா என்றால் இல்லை. இவ்வழக்கின் சர்வே எண். 229/17-ல் உள்ள 456 1/2 சதுரடி நிலம் எனக்கு எவ்வாறு கிடைத்து என்றால் எனது தாத்தா, தகப்பனார் அதன் பின்னர் நான் தொடர்ந்து அனுபவித்து வந்தபின்னர் அரசாங்கம் எனது பெயரில் பட்டா கொடுத்தது. மேற்படி இந்த சர்வே எண். 229/17க்கு பக்கத்தில் வேறு ஏதேனும் சர்வே எண் நிலம் எனக்கு உள்ளதா என்றால் உள்ளது அந்த சர்வே எண். 229/9 என்ற நிலம் உள்ளது. மேற்படி 229/9ற்கு பக்கத்திலேயே 229/17 உள்ளதா அல்லது தள்ளி உள்ளதா என்றால் பக்கத்திலேயே உள்ளது. சர்வே எண் 229/9ல் தான் எனக்கு இடம் உள்ளது என்றாலும், அதற்கு அருகில் என் அனுபவப்பாத்தியத்தில் 229/17-ல் எனக்கு எந்த காலத்திலும் இடம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த பட்டாவினை நான் எப்போது வாங்கினேன் என்றால் இந்த பட்டாவினை வாங்கி 12 வருடங்களுக்கு மேல் ஆகிறது. மேற்படி தாவா சொத்திற்கான பட்டாவை வாங்கியதற்கு முன்பு மேற்படி நிலத்தை அனுபவித்து வந்ததற்கான தரை வரி ஏதேனும் அரசாங்கத்திற்கு செலுத்தியதற்கான ரசீது ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி பட்டா வாங்கியதற்கு பின்னர் அரசாங்கத்திற்கு நான் வரி ஏதேனும் செலுத்தினேனா என்றால் இல்லை. சர்வே எண். 229/7, 8, 21 ஆகிய நிலங்கள் அனைத்துமே பிரதிவாரிகளுடைய சொத்து என்றால் சரிதான். மேற்படி பிரதிவாதிகளின் சொத்திற்கு அருகில் தான் 229/17

உள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண். 229/17 கடந்த 100 வருடங்களாக பிரதிவாதிகளின் அனுபவத்தில் தான் உள்ளது நான் தான் பொய்யான சங்கதிகளைச் சொல்லி அரசாங்கத்திடம் பட்டா வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி பிரதிவாதியின் வீட்டு வாசலுக்கு எதிரில் தான் மேற்படி சர்வே எண் 229/17 உள்ளது என்றால் சரிதான். மேற்படி 229/17க்கும் 229/9க்கும் இடையில் வள்ளி என்பவரின் நிலம் உள்ளது என்றால் சுமார் 6 வருடத்திற்கு முன்பு தான் வள்ளி 229/8ல் உள்ளார் என்றால் சரிதான். மேற்படி வள்ளி எனது பங்காளியிடம் இருந்துதான் 229/8யை வாங்கினார். தாவா சொத்து 229/17-க்கு கிழக்கில் சடையாண்டியின் வீடு மற்றும் இடமும், மேற்கில் வள்ளியின் வீடு மற்றும் காலி மனையும், வடக்கில் எனது சித்தப்பா நல்லத்தம்பியின் வீடு மற்றும் நிலமும், தெற்கில் பிரதிவாதியின் வீடு உள்ளது. நான் எந்த காலத்திலும் தாவா சொத்து 229/17யை அனுபவித்து வரவில்லை எனக்கு சொந்தமான நிலமான 229/9க்கு அருகில் தாவா சொத்தும இல்லை பிரதிவாதியின் சொத்திற்கு அருகில் தான் தாவா சொத்து உள்ளது பிரதிவாதிதான் தாவா சொத்தினை அனுபவதிது வருகிறார் நான் அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தவறான ஆவணங்களின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட பட்டாவினைக் கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி 229/17 சொத்திற்கு எனது பெயரில் கொடுக்கப்பட்ட பட்டாவினை ரத்து செய்து கொடுக்கும்படி வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான் 12 ஆண்டுகளாக நிலவையில் உள்ளது. மேற்படி எனக்கு கொடுக்கப்பட்ட பட்டாவினை வருவாய் நீதிமன்றம் ரத்துசெய்யக்கூடாது என்று நான் இந்நீதிமன்றத்தில் இந்தவொறு தவறான வழக்கை தாக்கல்

செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த தாவா தள்ளுபடி செய்யத்தகுந்தது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- M.C.Arun
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்